



# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - நாமக்கல்

## நாமக்கல் மாவட்டம்

## பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், தட்டாங்குட்டை ஊராட்சி, குமாரபாளையம் அமானி கிராமம், சர்வே எண்: 291/2A2-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

| | | |
|---|---|---|
| கோப்பு எண் | : | NKL/3HLGQ403/27684/2024 |
| இணையதள விண்ணப்ப எண் | : | 3HLGQ403 |
| அளவு | : | 1:400 (அ)1"=33'0" |

I குறிப்பு :

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : | 2.12 ஏக்கர் (அ) 8583.00 சதுர.மீ |
| சாலையின் மொத்தப்பரப்பு | : | 2891.845சதுர.மீ |
| கோரிய மனைகள் | : | 23 |
| ஒதுக்கிய மனைகள் | : | 29 |
| மனைப்பிரிவு எல்லை | | |
| உத்தேச சாலை | | |
| நிலையில் உள்ள சாலை | | |

II பொது ஒதுக்கீடுகள் :

(உத்தேச சாலை பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவைகள்

சாலையின் மொத்தப்பரப்பு (மூலை முடக்கு உட்பட) : 2891.845 சதுர.மீ

பூங்காவின் மொத்தப்பரப்பு (10%) : 641.675 சதுர.மீ(11.27%)

பொது உபயோகம் TNCDBR 47(8) ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டவை 1%

| | | |
|---|---|---|
| I .பொது உபயோகம் | : | 29.97ச.மீ (0.52%) |
| II .மின்பகிர்மானம் | : | 30.66ச.மீ (0.53%) |

மூலை முடக்கு : 12.0மீ அகல சாலை வரை 1.5மீ x 1.5மீ விடப்பட வேண்டும்

**நிபந்தனைகள்:**

1.அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை(MA-1) நாள் 4.2.2019-ன் படி உள்ள நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.

2.அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை(MA-1) நாள் 31.01.2020-ன் படி உள்ள நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.

3.இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4.நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

5.விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6.நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின்பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/ திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7.நீர்நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

8.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

9.நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கதல்ல.

10.உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலர் / யூனியன் பொறியாளர் (BDO / UE) அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

11.உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

**SWP/DTCP/NAMAKKAL/LAYOUT No.264/2024**

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2024.10.17 10:58:14

ச.சுரேந்திரன்
வரைவாளர் நிலை-III

மு.தேன்மொழி
மேற்பார்வையாளர்

(E-SIGN)
உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்